பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 07 2026 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்புச் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

2. மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை வழங்கும் "தில்லி லக்ஷ்மி யோஜ்னா" திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. நீட் தேர்வு தொடர்பான போராட்டங்களில் பங்கேற்ற மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்று மேற்குவங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.

4. அசாமில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 75ஆக அதிகரித்துள்ள நிலையில், நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. ஈரான் மீதான தாக்குதல் தொடங்கிய பின்னர் முதல் முறையாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ சந்தித்துப் பேசினார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்புச் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்த மசோதா மீதான விவாதத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் நேற்று தொடங்கி வைத்துப் பேசினார்.

இந்த சட்டத் திருத்தத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு முக்கிய அம்சங்களை அவர் எடுத்துக் கூறினார்.

*முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்க இதில் வகை செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.*

*முறைகேடுகள் தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிக்க ஏதுவாக விரைவு நீதிமன்றங்கள் அமைப்பதற்கும் சட்டத்திருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.*

*காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் விவாதத்தில் உரையாற்றிய நிலையில் இன்றும் விவாதம் தொடர்ந்து நடைபெறும்.*

*<<<<>>>>*

*தில்லியில் மகளிருக்கு சமூகப் பாதுகாப்பும், பொருளாதார அதிகாரமும் வழங்கும் வகையிலான "தில்லி லக்ஷ்மி யோஜ்னா" திட்டத்திற்கு அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

*இந்த திட்டத்தின்கீழ் மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.*

*தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டின் மாநில பட்ஜெட்டில் 5 ஆயிரத்து 110 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

*நீட் தேர்வு தொடர்பான போராட்டங்களில் பங்கேற்ற மாணவர்களுக்கு எதிராக கட்டாய நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்று மேற்குவங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.*

*எனினும் குற்ற வழக்குகள் தொடர்பான பதிவுகள் உள்ளவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க மேற்குவங்க அரசு முடிவு செய்துள்ளதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இம்மாநிலத்தில் நீட் தேர்வு முறைகேடு உள்ளிட்ட பிரச்சினைகளை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்ட 16 பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

*ஜார்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்ட்களுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக அந்த அமைப்பின் முக்கிய தலைவர் Misir Besra, பாதுகாப்புப் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.*

*தன்பாத் - Giridih எல்லைப் பகுதியில் மாநில காவல்துறையினர், துணை ராணுவப் படையினர் இணைந்து அவரை கைது செய்ததாகவும், அவரை பற்றிய தகவல் அளிப்போருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்த தாகவும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*Mehnath என்ற பெயருடைய மாவோயிஸ்ட் மண்டல குழுவின் உறுப்பினராகவும் அவர் செயல்பட்டு வந்தார்.*

*<<<<>>>>*

*நாகாலாந்தின் Khopanala-வில் கடந்த 13ஆம் தேதி நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவம் குறித்த விசாரணையை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.*

*அசாம் துப்பாக்கிப் படையினர் சென்ற வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் வீரர் ஒருவர் உயிரிழந்தார். 4 பேர் காயமடைந்தனர்.*

*இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை நாகாலாந்து காவல்துறை மேற்கொண்ட நிலையில் தற்போது தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு உத்தவிடப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சகத்தின் அறிவிக்கையை சுட்டிக்காட்டி நாகாலாந்து காவல்துறை தெரிவித்துள்ளது.*

*<<<<>>>>*

*அசாமில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 75ஆக அதிகரித்துள்ள நிலையில், நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*சிவசாகர் மாவட்டத்தில் மட்டும் நேற்று 7 பேர் மழை தொடர்பான சம்பவங்களில் உயிரிழந்தனர்.*

*இதனிடையே பல்வேறு மாவட்டங்களிலும் வெள்ளநீர் வடிந்து வருவதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமை சீரடைந்து வருவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*வெள்ள பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை சேவைகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்ப தொடங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இதற்கிடையே மழை வெள்ள தொடாபான சம்பவங்களில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்.*

*30 நாட்களுக்கும் மேலாக காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.*

இதற்கிடையே வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் கேரள மாநிலத்தின் 7 மாவட்டங்களுக்கு இன்று கனமழைக்கான எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

வரும் சனிக்கிழமை வரை இந்த மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஈரான் மீதான தாக்குதல் தொடங்கிய பின்னர் முதல் முறையாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ நேற்று சந்தித்துப் பேசினார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்ததாகவும், ஆக்கப்பூர்வமான வகையிலும், சுமுகமான முறையிலும் அமைந்த தாகவும் வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் கரோலின் தெரிவித்துள்ளார்.

எனினும் இரு தலைவர்களின் சந்திப்பு குறித்து எந்த விவரமும் அவர் வெளியிடவில்லை.

சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த இஸ்ரேல் பிரதமர், அமெரிக்க அதிபருடனான தமது பேச்சுகள் சுமூகமான முறையில் இருந்ததாக கூறினார்.

பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் ஆதரவளிக்கக்கூடிய வகையிலும், அணு ஆயுதங்களை ஈரான் வைத்திருக்கவில்லை என்பதை உறுதி செய்யும் பொதுவான இலக்குடனும் தமது பேச்சுகள் அமைந்ததாகவும் திரு. நெதன்யாகு தெரிவித்தார்.

*ஈரான் விவகாரத்தில் இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாக தகவல் வெளியான நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.*

*<<<<>>>>*

*மத்திய அரசுத்துறை செயலாளர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று உயர்மட்ட ஆலோசனை நடத்தினார்.*

*நிதி, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை, தொழில்நுட்பத் துறைகளின் உயரதிகாரிகளும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குளை எட்டுவது தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.*

*பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நீடித்த வளர்ச்சியை நோக்கி செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அப்போது வலியுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டு மக்களின் நலன்களுக்கான ஆட்சி முறையை தொடரவும், உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் உள்நாட்டு தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பது குறித்தும் மத்திய அரசுத்துறை செயலாளர்களுடன் தாம் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*முக்கிய துறைகளில் இளம் தொழில்முனைவோரின் தீவிர பங்களிப்பை ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தியதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*<<<<>>>>*

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் தடகள வீரர் குல்வீர் சிங், 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.*

*கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர், நேற்று பந்தய தூரத்தை 27 நிமிடங்கள் 49 வினாடிகளில் கடந்து, இரண்டாவது இடத்தைப் பிடித்து, இந்தப் பிரிவில் முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.*

*ஆஸ்திரேலியாவின் Ky Robinson தங்கப் பதக்கமும், இங்கிலாந்தின் David Mullarkey வெண்கலப் பதக்கமும் வென்றனர்.*

*மகளிர் 69 கிலோ எடைப்பிரிவு பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் Harjinder Kaur வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.*

*மேலும் குத்துச்சண்டைப் போட்டிகளில் மகளிர் பிரிவில் இந்தியாவின் ப்ரீத்தி பவார், ப்ரியா கங்காஸ், ஆடவர் பிரிவில் ஐடுமானி சிங் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறி பதக்க வாய்ப்பை உறுதி செய்துள்ளனர்.*

*<<<<>>>>*